# நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தை மீள்பரிசீலனை செய்வதற்கான இலங்கையின் திட்டங்களை குளோபல் நெட்வர்க் இனிஷியேட்டிவ் (GNI) வரவேற்கிறது

*தொழில்நுட்பத் துறையில் தனியுரிமை மற்றும் கருத்து சுதந்திரத்தை மையமாகக் கொண்ட பல்துறை பங்குதாரர் அமைப்பான குளோபல் நெட்வர்க் இனிஷியேட்டிவ் (GNI), **நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தை** (OSA) 2023 திருத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தின் முடிவை வரவேற்கிறது. குளோபல் நெட்வர்க் இனிஷியேட்டிவ் (GNI), நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் (OSA) அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து அதை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது, மேலும் தனியுரிமை மற்றும் கருத்து சுதந்திரத்தின் மீதான அதன் தாக்கங்கள் குறித்து எங்கள் முந்தைய அறிக்கையில் எழுப்பப்பட்ட கரிசனைகளை மீண்டும் வலியுறுத்துகிறது. 2024 ஆகஸ்ட் மாத்தில் இடம்பெற்ற முந்தைய சுற்றில் திருத்தங்கள் மேற்கொண்டிருந்தபோதிலும், தேசிய மற்றும் சர்வதேச சட்டத்தின் கீழ் இலங்கை உறுதியளித்துள்ள மனித உரிமை கொள்கைகளை அடிப்படையாக மீறும் அதன் மிகவும் சிக்கலான சில விதிகளை இந்த சட்டம் தக்க வைத்துக் கொண்டுள்ளது. எனவே, நிபுணர்கள் மற்றும் பல்துறை பங்குதாரர்களின் உள்ளீடுகளுடன், நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தை (OSA) திருத்துவதற்கு கடுமையான, வெளிப்படையான மற்றும் உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறையை புதிய பாராளுமன்றம் பின்பற்ற வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம். புதிய அரசாங்கம் பரந்த சீர்திருத்தங்களுக்கு சிறந்த ஆதரவை வழங்கும் என்பதால், நிகழ்நிலை பாதுகாப்பில் மனித உரிமைகளுக்கான உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் இணைந்த புதிய, நோக்கத்துடன் கட்டமைக்கப்பட்ட ஒரு புதிய சட்டத்தைத் தேர்ந்தெடுப்பதே இலங்கைக்கான சிறந்த வழி என்பதை நாங்கள் பரிந்துரைக்கிறோம்.*

*இந்த ஆண்டின் தொடக்கத்தில் நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தில் (OSA) செய்யப்பட்ட திருத்தங்கள் நிகழ்நிலை பாதுகாப்பு ஆணைக்குழுவின் செயல்பாடுகளுக்கு கூடுதல் வெளிப்படைத்தன்மை தேவைகளை அறிமுகப்படுத்துவது போன்ற சில சாதகமான மாற்றங்களை அறிமுகப்படுத்திய போதிலும், அது பெரும்பாலும் சட்டத்தின் பிற அம்சங்களை நிவர்த்தி செய்யத் தவறிவிட்டுள்ளதோடு, சில சந்தர்ப்பங்களில், ஏற்கனவே உள்ள சிக்கள்களையும் அதிகப்படுத்தியுள்ளது. முன்னர் இலங்கை பிரஜைகளுக்கு பயன்படுத்தப்பட்ட சட்டத்தின் நோக்கம், குடியுரிமையை பொருட்படுத்தாமல், "இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் இருக்கும் போது, இலங்கை பிரஜை தொடர்பில் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்தை" செய்யும் எந்தவொரு நபரையும் குற்றவாளியாக்கும் வகையில் கணிசமாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இது சட்டத்தின் எல்லைக்கு அப்பாற்பட்ட அணுகல் தொடர்பான ஒரு சிக்கலான முன்னுதாரணத்தை நிறுவுகிறது, இது பிரயோகிக்கப்பட்டால், இதனூடாக சட்ட மோதல்கள் ஏற்படலாம் மற்றும் சர்வதேச இணக்கம் மற்றும் மனித உரிமைகள் பற்றிய குறிப்பிடத்தக்க கவலைகளும் எழுப்பப்படலாம்.*

*மேலும், "தவறான" மற்றும் "தடைசெய்யப்பட்ட" உள்ளடக்கத்தின் வரையறைகள் தெளிவற்றதாகவே உள்ளன, மேலும் பரந்த விருப்புரிமை அதிகாரம் மற்றும் நிகழ்நிலை பேச்சு தொர்பான சட்டபூர்வத்தன்மையை தீர்மானிப்பதற்காக நீதவான்களுக்கு தெளிவான வழிகாட்டுதல்கள் வழங்கபடாததால், இந்த தெளிவின்மை அகநிலை பொருள்கோடல் மற்றும் தன்னிச்சையான அமலாக்கத்திற்கு சட்டத்தை எடுத்துச் செல்கிறது, இது பேச்சு சுதந்திரத்தின் மீதான விகிதாசாரமற்ற கட்டுப்பாடுகளுக்கு வழிவகுக்கிறது. "தடைசெய்யப்பட்ட அறிக்கைகளை" தெரிவித்ததாகக் கருதப்படும் தனிநபர்களின் அடையாளம் மற்றும் இருப்பிட வெளிப்படுத்தலைக் கோர எவரையும் இச்சட்டம் மேலும் அனுமதிக்கிறது, மேலும் குற்றம் நிரூபிக்கப்பட்டால் குறித்த*

நபருக்கு ஐந்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனைக்கு உட்படுத்தும் வகையிலான குற்றவியல் பொறுப்பை சுமத்த முடியும். சர்வதேச சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட பேச்சைப் பயன்படுத்துவதற்காக பத்திரிகையாளர்கள், மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் பிறரை குறிவைக்க பயன்படுத்தப்படும் பிற சட்டங்களில் இதேபோன்ற விதிகளுக்கு எதிராக GNI தொடர்ந்தும் தன் எதிர்ப்புகளை தெரிவித்து வந்துள்ளது.

சட்டத்தின் அடித்தள கட்டமைப்பிற்குள் சட்டபூர்வத்தன்மை, விகிதாசாரத்துவம் மற்றும் தேவை ஆகியவற்றின் சர்வதேச மனித உரிமைகள் கொள்கைகளை வெளிப்படையாக இணைப்பதன் மூலமும், அத்துடன் கருத்து சுதந்திரம் மற்றும் தனியுரிமைக்கான உரிமை ஆகியவற்றை அதை செயல்படுத்துவதற்கான வழிகாட்டும் கொள்கைகளாக சாதகமாக உறுதிப்படுத்துவதன் மூலமும் இத்தகைய மீறல்களைத் தடுக்க முடியும். வெளிப்படைத்தன்மை மற்றும் அதிகார சமநிலையை உறுதிப்படுத்த நீதித்துறை மேற்பார்வை, தாக்க மதிப்பீடுகள் மற்றும் மேல்முறையீட்டு பொறிமுறை வடிவத்தில் நடைமுறை பாதுகாப்புகளும் முக்கியம். தற்போது புதிய பாராளுமன்ற அமர்வு நடைபெறவுள்ள நிலையில், முக்கிய பங்குதாரர்கள் குழுக்களுடன், குறிப்பாக இலங்கை சிவில் சமூகத்துடன் முழுமையான ஆலோசனைகளை நடத்துவதற்கான வாய்ப்பு அரசாங்கத்திற்கு உள்ளது.

உலகெங்கிலும் உள்ள பல நிகழ்நிலை பாதுகாப்பு விதிமுறைகளை வடிவமைப்பதில் GNI தனது ஈடுபாட்டினை வழங்கியுள்ளது, மேலும் நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் குறித்து மீள்பரிசீலனைக்கு தயாராகும் இலங்கை அரசாங்கத்திற்கு பயனுள்ளதாக இருக்கும் ஏராளமான வளங்களை தன்வசம் வைத்துள்ளது. எங்களின் பலதரப்பு நிபுணத்துவம், அத்தகைய முக்கியமான சட்டத்தை வரைவதில் உரிய செயல்முறை மற்றும் வெளிப்படைத்தன்மை குறித்த முக்கியமான மற்றும் தனித்துவமான கண்ணோட்டத்தை வழங்குகிறது. எனவே, நிகழ்நிலை பாதுகாப்புச் சட்ட **(OSA)** மீளாய்வில் ஈடுபடுவதற்கு **GNI** தயாராக உள்ளது,மேலும் மனித உரிமை கோட்பாடுகள் மற்றும் ஒழுங்குமுறைகள் சிறந்த நடைமுறைகளின் அடிப்படையில் நிறுவப்பட்ட ஒரு புதிய சட்டத்தை உருவாக்குவதில் புதிய அரசாங்கத்திற்கும் பாராளுமன்றத்திற்கும் ஆதரவளிக்க எதிர்பார்க்கிறது.

## குளோபல் நெட்வர்க் இனிஷியேட்டிவ் (GNI) என்றால் என்ன?

குளோபல் நெட்வர்க் இனிஷியேட்டிவ் **(GNI)** என்பது பொறுப்புக்கூறல், பகிரப்பட்ட கற்றல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் மனித உரிமைகளின் ஆகிய அம்சங்களை அரசு மற்றும் நிறுவன கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் மீதான கூட்டு கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான அர்ப்பணிக்கப்பட்ட முதன்மையான பலதரப்பு பங்குதாரர் மன்றமாகும். கடந்த பல ஆண்டுகளில், GNI பல நியாயாதிக்க எல்லைகளில் "நிகழ்நிலை பாதுகாப்பு" மசோதாக்கள் மற்றும் இடையீட்டாளர் பொறுப்புச் சட்டங்களை மதிப்பாய்வு செய்து, கருத்து தெரிவித்து, வடிவமைக்க உதவியுள்ளது. எங்கள் மனித உரிமைகள் பகுப்பாய்வு மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கான பரிந்துரைகளை உள்ளடக்க ஒழுங்குமுறை மற்றும் மனித உரிமைகள் கொள்கை சுருக்கத்தில் காணலாம், இது பரந்த அளவிலான சட்ட முயற்சிகளை பகுப்பாய்வு செய்ய சர்வதேச மனித உரிமைகள் கொள்கைகளைப் பயன்படுத்துகிறது மற்றும் நிகழ்நிலை பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் ஒழுங்குமுறைகளை உரிமைகளை-பாதுகாப்பான முறையில் எவ்வாறு கையாள்வது என்பது குறித்த செயலூக்கமான வழிகாட்டுதலை வழங்குகிறது.